Independent
Prisoner Complaint
Investigations

# உங்கள் புகாரை சிறை எவ்வாறு கையாள்கிறது என்பதில் மகிழ்ச்சி அடையவில்லையா?

## இண்டிபண்டன்ட் பிரிசினர் கம்பளைண்ட்ஸ் இன்வெஸ்டிகஷென்ஸ் (IPCI) உதவக்கூடும்.

உங்களுக்காக புகார்களை சுயாதீனமாக விசாரிக்கிறது.

# உங்களுக்கு தெரியுமா?

- ஒவ்வொரு வருடமும், ஆயிரக்கணக்கான கைதிகள் தங்கள் புகார்களுக்கு உதவும் பொருட்டு IPCI யை தொடர்பு கொள்கின்றனர்.
- நாங்கள் உங்களது புகார்களை விசாரித்து சிறைகளுக்கு பரிந்துரைகளை வழங்குகிறோம்.
- நாங்கள் பெறும் அனைத்துப் புகார்களில் கால் பங்கிற்கும் மேலான புகார்களையும், சொத்துப் புகார்களில் கிட்டத்தட்ட பாதியையும் நாங்கள் ஆதரிக்கிறோம்.
- புகார்கள் பற்றிய சர்ச்சைகளைத் தீர்க்க உதவுவதற்கு,பொருத்தமாய் இருக்கும் பட்சத்தில் எங்களால் மத்தியஸ்தம் செய்ய முடியும்.
- நாங்கள் உங்களுடன் உடன்பட்டால், நீங்கள் சிறையிலிருந்து மன்னிப்பு பெறலாம். சேதமடைந்த சொத்துக்களுக்கு இழப்பீடு அல்லது சிறைச்சாலையின் செயல்பாட்டில் மாற்றம் செய்யலாம்.

**உங்களுக்காக புகார்களை சுயாதீனமாக விசாரிக்கிறது.**

# IPCI யை பற்றி

- IPCI முற்றிலும் சுதந்திரமானது. நாங்கள் சிறை சேவை அல்லது HMPPS ற்காக வேலை செய்யவில்லை.
- IPCI விதி 39 -ன் கீழ் செயல்படுகிறது, இதன்அர்த்தம் நீங்கள் எங்களுக்கு எழுதிய கடிதங்கள் சிறைச்சாலையால் வாசிக்கப்படாது.
- நீங்கள் எங்களிடம் புகார் செய்தால், அது உங்களுக்கு எதிராக பயன்படுத்தப்படாது, நீங்கள் பிரச்சனையில் சிக்க மாட்டீர்கள்.
- உங்கள் புகார் பெறப்பட்டு 10 வேலை நாட்களுக்குள் நாங்கள் விசாரிக்க முடியுமா என்பதை நாங்கள் உங்களுக்குத் தெரிவிப்போம்.
- உங்கள் புகாருக்கு 6 வாரங்களுக்குள் சிறைத்துறை பதில் அளிக்கவில்லை என்றால் அதை நாங்கள் விசாரிக்கலாம்.

IPCI என்பது சிறைச்சாலைகள் நன்னடத்தை ஒம்புட்ஸ்மேன் (PPO) இன் ஒரு பகுதியாகும்.

# நான் என்ன புகார் செய்ய முடியும்?

**சிறைகளில் உள்ள அனைத்து வகையான பிரச்சனைகள் குறித்தும் IPCI யிடம் புகார் செய்யலாம்:**

- ✔ தொலைந்த அல்லது திருடப்பட்ட அல்லது சேதமடைந்த சொத்து.
- ✔ இறுதி தீர்ப்பு மற்றும் IEP களுக்கு சரியான செயல்முறை பின்பற்றப்படவில்லை என நீங்கள் உணர்ந்தால்.
- ✔ ஊழியர்களின் கொடுமைப்படுத்துதல், மிரட்டல் அல்லது துன்புறுத்தல்.
- ✔ சிறை ஆட்சி நிர்வாக முறைஅல்லது சிறை நிலைமைகளில் நீங்கள் மகிழ்ச்சியடையவில்லை என்றால்.
- ✔ வேலையிலிருந்து நியாயமற்ற நீக்கம் அல்லது ஊதிய இழப்பு.
- ✔ ஊழியர்களின் முறையற்ற தாக்கற்றல் பயன்பாடு.

பொதுவாக, உங்கள் அசல் புகாருக்கு சிறைச்சாலை உங்களுக்கு இறுதிப் பதிலை அளித்து 3 மாதங்களுக்கும் மேலாகிவிட்டால் அதை எங்களால் விசாரிக்க முடியாது.

உங்கள் புகாரை எங்களால் நிர்வாகிக்க முடியாவிட்டால், உதவக்கூடிய ஒருவரிடம் நாங்கள் உங்களை வழிநடத்த முடியும்.

# எப்படி புகார் செய்வது

- முதலில் உங்கள் சிறைச்சாலையில் முழு புகார் செயல்முறையையும் நீங்கள் தெரிந்து கொண்டதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
- சிறைச்சாலையின் பதிலில் நீங்கள் ஏன் மகிழ்ச்சியடையவில்லை என்பதை எங்களிடம் கூறும் IPCI படிவத்தை பூர்த்தி செய்யவும்.
- IPCI படிவம் மற்றும் உங்கள் COMP படிவங்கள் மற்றும் பதில்களின் நகல்களை எங்களுக்கு அனுப்பவும்.

**இந்த தகவலை பல மொழிகளில் நாங்கள் மொழிபெயர்த்துள்ளோம். உங்கள் மொழியில் இந்த துண்டுப் பிரசுரம் கிடைக்கவில்லை என்றால், தயவு செய்து எங்களைத் தொடர்பு கொள்ளவும்.**

# உங்கள் புகாரை எங்கு அனுப்புவது.

**IPCI, Third Floor,
10 South Colonnade,
London, E14 4PU**

IPCI க்கு கடிதத்தை அனுப்புவது இலவசம். தபால் கட்டணம் சிறைச்சாலையால் வழங்கப்படும்.

அசல் ஆவணங்களை எங்களால் திருப்பித் தர முடியாது என்ற காரணத்தால் அவற்றை தயவுசெய்து எங்களுக்கு அனுப்ப வேண்டாம்.

